RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22227

OPEN ACCESS

# பிற்காலச் சோழர் காலத்தில் பின்பற்றிய சில வழிபாட்டு மரபுகள்

**பா. மரகதம்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, திருச்சி-22, தமிழ்நாடு, இந்தியா

# Some of the Cult Traditions Followed in the Later Chola Period

**B. Maragatham** [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli-620022, Tamil Nadu, India

* Corresponding Author: maragathamsvga@gmail.com

Received: 21.09.2022
Revised: 03-11-2022
Accepted: 07-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Worship a deity has been followed since ancient times. Worship has varied with time. The ancient tribal people worshipped nature as their only deity. Later as civilization developed, worship also began to change depending on the group or based on a community. Burying the dead and planting a stone in his memory, then a wall around the stone are some of the practices that were followed by a group of people. Nadukal worship and Pallipadai worship developed during Chera, Chola and Pandiyar period. All these kind of worship has been known through excavation. Through this, one can know the heroic deeds of the ancestors. According to today's psychologists, children who have been involved in rituals from a young age are afraid of making a big mistake in their life. The ancient Tamil people practiced this centuries ago. Worship is the basis for a man to be in good moral deeds. The ancient Tamil people have taught this kind of special norms to us and so we should be forever grateful to the Tamil community. The young generation living today must understand the need for worship and pass it on to the next generation. This article is about the worships followed by the later Cholas such as Nadukal worship, Pallipadai worship, Navakandam, Nandavilaku etc. and the rise of Saivism. Through this article, it is also possible to know that people followed Vaishnava worship, Jainism and Buddhism during the era of Raja rasa Chola. In addition to all these, we can also know about the great temple of Thanjavur, which is a hall of sculptures that have passed through many earthquakes and is standing majestically after a thousand years.

**Keywords:** Worship, Navakandam, Pallipadai Worship, Nadukal Worship

## முன்னுரை

கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய மூத்த குடியினர் எனத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாகத் தமிழ் மொழியின் தொன்மையை நன்கு அறியமுடியும். அளவிற்கு அதிகமாக பொறுமையும், அளவுக்கு அதிகமாக வீரத்தையும் அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் பெற்றிருந்தனர். பொய் சொல்லுதல், புலால், சூது, களவு, கள் ஆகியவற்றை வெறுத்து அவற்றைக் கொலையைச் செய்வதற்கு ஒப்பான பாவம் என்று எண்ணினர். ஆய கலைகள் பற்றி நன்கு அறிந்தனர். தமிழர் வாழ்வே. தமிழர் நாகரிகம் எனக் கொண்டனர். நிலத்தை ஐவகையாகப் பிரித்தனர். காற்றைக் கோடை, கொண்டல், வாடை, தென்றல் என நான்காகப் பிரித்தனர். மொழியை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்தனர். இலக்கியத்தை அகம், புறம் எனப் பிரித்தனர் ஆனால் ஒழுக்கத்தை மட்டும் ஒன்றாகக் கண்டது தமிழ்ச் சமூகம் (Chidambaranar et al., 2007).

அத்தகைய மேன்மையான ஒழுக்கத்தை வழிபாடுகள் மூலம் கற்றுக்கொடுத்தனர். குகைகளில் வாழ்ந்த ஆதிமனிதன் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டான். பின் நாகரிகம் அடைந்த பின்பு இனக்குழுக்களாகப் பிரிந்து அவரவருக்கு விருப்பமுள்ள குலதெய்வ வழிபாடு முறை தோன்றியது. மேலும் சிற்பங்களை வடித்து அதற்கான கோயில் அமைத்து, மந்திரங்கள் சொல்வதன் மூலமாக வழிபாட்டைப் பெரிதுபடுத்தினான்.

கி.பி.9.ம் நூற்றாண்டில் வேரூன்றிய பிற்காலச் சோழர்கள் அவர்களது முன்னோர்கள் செய்து வந்த வழிபாடுகளைத் தொடர்ந்து செய்தனர். ஒர் ஆட்சியின் கீழ் இருந்த பெருமை இரு நாடுகளுக்கு இருக்கிறது. ஒன்று அபிசீனியா அங்கு ஓராயிரம் ஆண்டு தொடர்ந்து ஒரே ஆட்சி இருந்தது. மற்றொன்று தமிழகம். அது ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஓரே ஆட்சியில் இருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து தமிழ் மக்கள் கடல் வணிகம் செய்து வாழ்ந்து வந்தனர். முதல் முதலில் கட்டுமரத்தைக் கட்டிவிட்டவன் தமிழன் என்ற பெருமை முன்னோர்களை சேரும். (Chidambaranar et al., 2007).

சோழ அரசர்கள் கட்டிய கோவில்கள், பள்ளிப்படை, நடுகல் போன்றவை இன்றளவும் பயன்பாட்டுக்கு உரியனவாக உள்ளன. அத்தகைய சிறப்பு வாய்ந்த கோயில்களைப் பற்றியும் பழக்கவழக்கங்களையும் வரும் தலைமுறைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது இன்று வாழும் தமிழ்ச் சமூகத்தின் கடமையாகும்.

## ஆன்மிக வழிபாடுகள்

வழிபாடு என்பது மதம், குலம், நாடு, இடம், குடும்ப பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு வழிமுறைகளில் பின்பற்றப் படுகிறது. பெரும்பாலும் மக்கள் அவர்களுடைய மனஅமைதிக்காகவும், அவர்களுக்கு வேண்டியது கிடைப்பதற்காகவும், முற்பிறவியில் செய்த பாவங்கள் தொலைந்து நல்லகதியை அடைய வேண்டும் என்பதற்காகவும் தெய்வ வழிபாடு அவசியம் என்று நினைக்கிறார்கள். இறைவன் ஒருவன் உள்ளான் என்று நம்பிக்கை உள்ள மக்கள் அவரவர் விரும்பிய தெய்வங்களை அவரவர்க்குரிய சமய முறைப்படி வீட்டிலோ, பொது இடங்களிலோ சென்று வழிபட்டனர். பிற்காலச் சோழர் மரபினைத் தோற்றுவித்த விசயாலய சோழன் வழிவழியாக சைவ மரபினராக இருந்து வந்துள்ளார். பிற்காலச் சோழரின் ஆட்சி காலம் கி.பி.850 - 1250 வரை இருந்தாக வரலாற்றாசிரியர் கூறுகின்றார். “பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தைப் பற்றி அறிய கல்வெட்டுச் சான்றுகள் மிகப் பலவாகும். 1887 முதன் இன்று வரை தென்னாட்டில் படி எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் ஏறத்தாழ 50,000க்கும் மேற்பட்டவை (சுமார் 2000 செப்பேடுகள், 3000 நாணயங்கள், முத்திரைகள் உட்பட). இந்தக் கல்வெட்டுகளில் 2600 கல்வெட்டுகள் இன்றையத் தமிழகப் பகுதியில் கண்டவை. ஏறத்தாழ அனைத்தும் தமிழ்க் கல்வெட்டுகள். இந்த 26000-இல் 35 விழுக்காடு ஆகிய 9000 கல்வெட்டுக்கள் பிற்காலச் சோழரைச் சார்ந்தவை என்பார். சுப்பராயலு” (Ramanadhan, 2008).

இதன் மூலம் வரலாற்றை அறிந்து கொள்ள கல்வெட்டுகள் காலம் கடந்தும் துணைநிற்கின்றன என்பது தெளிவாகும்.

## சைவ வழிபாடு

சோழர்கள் காலம் காலமாக சைவ மதத்தைப் பின்பற்றியுள்ளனர். இதை உறுதிப்படுத்தும் வகையில் காவிரியின் இரு மருங்கிலும் ஏராளமான சிவ தலங்கள் கட்டப்பட்டுள்ளன. அக்காலத்தில் கோவிலுக்கென்று இறையிலி நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அரசர்கள் செய்து வந்தனர். இறையிலி நிலம் என்றால் வரி வசூல் செய்யப்படாத நிலம் என்று பொருள் கொள்வர். விசயாலயச் சோழன் தஞ்சையில் வெற்றிப்பெற்றதைப் பற்றிய செய்திகள், “இந்தியப் பேரரசுகளில் ஒன்றாகக் கருதத்தக்க பிற்காலச் சோழர் பேரரசைத் தோற்றுத்த முதல்வன், இவன் முத்தரையரை வென்று தஞ்சாவூரைக் கைக் கொண்டான். அங்குத் துர்க்கைக்குக் கோவில் ஒன்றைக் கட்டினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் செப்புகின்றன.” என்று இராசமாணிக்கனார் அவரது நூலில் கூறுகிறார் (Rasamanikanar, 2016).

மேலும் திருச்சியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் “விசயாலயன் தன்பெயர்க்கொண்ட “விசயாலயச் சதுர்வேதிமங்கலம்” என்னும் சிற்றூரைப் பிரம்மதேயமாக விட்டான்” (Rasamanikanar, 2016) என்று கூறப்பட்டுள்ளது. விசயாலயன் மகன் ஆதித்தன் பல சிவன் கோவில்களைக் கட்டினான். அவன் மகன் முதற் பராந்தகன் முதலில் தந்தைக்கு கோவில் கட்டிய சிறந்த மகன் “ஆதித்தன் தொண்டை நாட்டில் காளத்திக்கு அருகில் இறந்தான். அவன் மகனான பராந்தகன் அவன் இறந்த இடத்தில்ஒரு கோவிலைக் கட்டினான். அது “கோதண்ட ராமேச்சரம்” எனவும் “ஆதித்தேச்சரம்” எனவும் வழங்கியது. விழாக் காலங்களில் ஆயிரம் பிராமணர்க்குக் அன்னமிட ஏற்பாடு செய்தான்.” என்று அவரது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Rasamanikanar, 2016).

முதற் பராந்தகன் சிறந்த சிவபக்தன். வீர நாராயணபுரம் போன்ற பல கிராமங்களை வேதம் வல்லார்க்கு முற்றூட்டாக அளித்தான். புலியூர்ச் சிற்றம் பலத்தைப் பொன்வேய்ந்தவன் என்று லீடன் பட்டயம் கூறுகிறது. ஏமகர்ப்பம், துலாபாரம் செய்து புகழ் பெற்றவன். இவன் சிவனது பாதத்தாமரையில் உறையும் வண்டு என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுவதாக இராசமாணிக்கனார் உரையில் கூறியுள்ளார். ஆதித்த சோழன் கட்டாதுவிட்ட பல கோவில்கள் முதற் பராந்தகன் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டன. என்ற தகவலையும் இராசமாணிக்கனார் பதிவுசெய்துள்ளார்.

முதற் பராந்தகன் மகனான இராசாதித்தன் என்பவன் “காட்டு மன்னார்குடியில் அளந்தேச்சுரர் கோவிலைக் கட்டினான்” (Rasamanikanar, 2016)

அவனுக்குப் பின் வந்த கண்டராதித்தன் சிதம்பரத்தைப் புகழ்ந்து திருவிசைப்பாடியுள்ளான். அதில் அவன் தன்னைக் கோழி வேந்தன், என்றும் தஞ்சை கோன் என்றும் குறிப்பிட்டுள்ளான். காவிரியின் வடகரையில் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்று அவனது பெயரால் ஊர் உண்டாக்கியுள்ளான். இதனை உறுதிப்படுத்தும் விதமாக சோழர் வரலாறு என்ற நூலில் “கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள திருமழபாடி என்னும் தலத்திற்கு மேற்கே ஒரு கல்தொலைவில் உள்ள கண்டராதித்த - சதுர்வேதி மங்கலம்” என்ற நகரம் இவன் அமைத்ததே ஆகும். இவன் மனைவியாரான செம்பியன் மாதேவியார் சிறந்த சைவப் பெண்மணியார். இவர் இராசராசன் ஆட்சியிலும் உயிரோடு இருந்தவர். தம் கணவன், மகன், மருமகளார் பலர், சுந்தரசோழன் முதலிய எல்லோராலும் பாராட்டப்பட்டவர். இவர் தேவராப் பாடல் பெற்றுள்ள பல கோவில்களைக் கற்கோவில்கள் ஆக்கினார் பல கோவில்கட்கு ஆடை அணிகள், வெள்ளிப் பாத்திரங்கள் முதலியன அளித்தார். பல கோவில்கட்கு நிலங்களைத் தானமாக விட்டார்.” என்று அவரது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Rasamanikanar, 2016).

கண்டராதித்தனுக்குப் பிறகு வந்த அரிஞ்சயன் ஓராண்டு காலம் அரசனாக இருந்து உயிர் நீத்தவன் இவனது மனைவியரில் வீமன் குந்தவையார், கோதைப் பிராட்டியார் என்ற இருவரும் நீண்ட காலம் இருந்து பல திருப்பணிகள் செய்தனர். அரிஞ்சயன் மகனான இரண்டாம் பராந்தகன் காஞ்சிபுரத்தில் தனக்கென்று இருந்த அரண்மனையில் இறந்தார். அதனால் பொன்மாளிகை துஞ்சிய தேவர் என்று அழைக்கப்பட்டார். அவரது மனைவி வானவன்மாதேவியும் அவருடன் உடன்கட்டை ஏறினார். பின்நாளில் அவர்களது மகள் குந்தவைதேவி தாய் தந்தை படிமங்களைத் தஞ்சை பெரியகோவிலில் செய்து வைத்தார் இரண்டாம் பராந்தகனை மக்கள் சுந்தர சோழன் எனவும் அழைத்தனர் (Balakumaran, 2002).

இவரது ஆட்சியில் தொண்டை மண்டலம் மீட்கப்பட்டதை இராசமாணிக்கனார், “முதற் பராந்தகன் இறுதிக் காலத்தில் இழந்த தொண்டை மண்டலம் அவன் மரபினரது இடைவிடா முயற்சியால் சிறிது சிறிதாகக் கைப்பற்றப்பட்டு வந்தது என்பது தெரிகிறது.” என்று சோழர் வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (Rasamanikanar, 2016).

சுந்தர சோழனுக்குப் பிறகு வந்த உத்தம சோழன் என்பவர் கண்டாராதித்தர் - செம்பியன் மாதேவியார் இருவரின் மகனாவார். இவர் ஆட்சிகாலத்தில் முன்னோர்கள் கட்டி வைத்த பல கோயில்களைச் சீரமைத்தார். முதலாம் இராசராச சோழனே சோழப் பேரரசை விரிவாக்கி நிலைபெறச் செய்த பேரரசன் ஆவான். இவன் உண்டாக்கிய பேரரசு ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் நிலைபெற்றிருந்தது. என்ற தகவல் சோழர் வரலாறு நூலில் இடம்பெற்றுள்ளது. ஏனென்றால் இவன் சிறுவயதில் இருந்தே தந்தை மற்றும் சிற்றப்பன் ஆட்சியை, அரசியல் அமைப்புகளை நன்கு கற்று

அறிந்தான். அவன் பட்டத்திற்கு வரும்முன்பே, ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே திட்டம் தயார் செய்து வைத்தான். ஆட்சிக்கு வந்தபின் அதை செவ்வனே நிறைவேற்றினான். இவனது ஆட்சியில், ஓவியம், சிற்பம், நாடகம், இசை, இலக்கியம், இன்ன பிறவும் நன்கு வளரத் தொடங்கின. சமயப்பொறையுடன் திகழ்ந்து விளங்கினான். என்று இராசமாணிக்கனார் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைப் போன்ற காரணங்களாலேயே இவனது ஆட்சியை மக்கள் “பொற்காலம்” என அழைத்தனர். இராசராசன் சிறந்த சிவபக்தன் அதற்கு அவன் கட்டிய தஞ்சை பெரியகோவில் சாட்சியாய் நிற்கிறது. இவனது ஆட்சி காலத்தில் பாடல் பெற்ற பல கோவில்கள் கற்றளிகளாக மாறின.

## தஞ்சைப் பெரிய கோவில்

சோழ மன்னரின் ஆட்சிக்குப் பெரிய குறியீடு ஆகவும் சிற்ப கலைகளின் கூடம் எனவும் அழைக்கப்பட்ட தஞ்சைப் பெரியகோவிலில் முதற் வாசல் கேரளாந்தகன் திருவாயில் என்று அழைக்கப்படுகிறது. அடுத்து உள்ள நுழைவாயில் “இராசராசன் திரு வாசல்” என்று அழைக்கப்படுகிறது. கோவில் உள்வாயில் “திரு அணுக்கன் திருவாசல்” என்று அழைப்பர். விமானத்தின் தெற்கிலும், வடக்கிலும் வாயில்கள் உள்ளன. அங்கு படிகள் உள்ளன. தெற்குவாசல் ‘விக்கிரமன் திருவாசல் என்று அழைக்கப்படும் இவ்வாயிலின் கீழ்ப்பாகத்துத் திருமகள் வடிவமும், வடக்கு வாயிலின் கீழ்ப்பாகத்து நாமகள் வடிவமும் வனப்புறத் திகழ்கின்றன. திரு அணுக்கன் திருவாயில் இருபுறமும் அமைந்த படிகட்டுகளிலேயே முன்நாளில் சந்நதியை அடைவர். இப்படிகளே கோவில் எடுப்பித்தபோது உடன் உண்டானவை. இக்காரணம் கொண்டும் நிலப்பரப்புக்கு மேல் உயரமான மேடையில் அமைக்கப்பெற்ற தன்மையினாலும் இக்கோயிலை மாடக்கோவில்” என்றும் அழைப்பர். திரு. அணுக்கன் திருவாயிலுக்கும் எதிரே இப்போதுள்ள நேரான படிகள் பிற்காலத்தில் சரபோசி மன்னன் காலத்தில் கட்டியது. கோவிலின் நீட்டளவு 793 அடி, குறுக்களவு 397 அடி. கோவில் விமானம் 216அடி உயரம் அடி பருத்து நுனி சிறுத்த அமைப்புடையது (Rasamanikanar, 2016).

இதன் உச்சியில் போடப்பட்டுள்ள தளம் ஒரே கருங்கல் இதன் நிறை 80டன். விமானத்தின் மேல் தூபித்தறியில் வைக்கப்பட்டுள்ள செப்புக் குடத்தின் நிறை 3083 பலம் ஆகும். அதன் மேல் போர்த்துள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு நிறையுள்ளது. இராச ராசேச்சரத்து விமானம் ‘தக்கண மேரு’ எனப்படும். உட்கோயில் இறையறை அர்த்த மண்டபம், மகர மண்டபம், தியாகராசர் சந்தியுள்ள தாபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்று ஆறு பகுதிகளை உடையது. கோவிலில் உள்ள ஏழு வாயில்களிலும் 18அடி உயரமும் 8 அடி அகலமும் உள்ள 14 வாயில்காவலர் சிலைகள் உள்ளன என்று சோழர் வரலாறு நூலில் இடம்பெற்றுள்ளது (Rasamanikanar, 2016).

இராசராசனின் 25ம் ஆட்சி ஆண்டில் இக்கோயில் முடிக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டதாக இராசமாணிக்கனார் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உடையார் புதனத்தில் “இராசராசர் வாயில் என்று அழைக்கப்பட்ட சுவர் பக்கம் சிற்பங்கள் செய்கின்ற வேலை துவங்கியது. என்ன சிற்பங்கள் செய்ய வேண்டும். என்று சிற்பிகள் கைகட்டிக் கேட்க, கண்ணப்ப நாயனார் செய்யுங்கள். மன்மத தகனம், சிவனார் செய்ததைச் சொல்லுங்கள். நான் என்ன கோயில் கட்டி விட்டேன். மனசுக்குள் கோயில் கட்டினாராமே பூசலார் நாயனார் அவர் கதை சொல்லுங்கள்” எனறு விதம் விதமாக சக்ரவர்த்தி உடையார் சொல்ல சகலமும் ஓலையில் குறித்துக்கொண்டு அந்த இராசராசர் வாசலின் இருபக்கமும் அவர் சொன்னதையே சிற்பமாகச் செய்தார்கள்.” (Balakumaran, 2002). என்று கூறுவதில் இருந்து இராசராசனின் சைவப்பற்று வெளிப்படுகிறது. தஞ்சைப் பெரிய கோவில் முழுவதும் சிற்பங்கள் நிறைந்து இருப்பது போல கல்வெட்டுகளாலும் நிறைந்து காணப்படுகிறது தனிமனிதன் கொடுத்த ஒவ்வொரு கல்லும் அவரவர் பெயர் பொறிக்கப்பட்டு கோவிலில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய செயல்களினால் இராசராசன் மனது எந்தளவு கனிந்துள்ளது என்பதை நன்கு அறியலாம்.

இராசராசன் மகனான இராசேந்திர சோழன் அவனது ஆட்சிகாலத்தில் தந்தையைப் போல பெரிய கோவில் ஒன்றை செயங்கொண்டத்தில் கட்டினான். அதற்குக் கங்கை கொண்ட சோழபுரம் என்று பெயர்

இட்டான். அவனது மரபு வழியில் வந்த மகன்கள், பேரன்கள் எல்லோருமே சைவ வழிபாட்டைப் பின்பற்றியுள்ளனர்.

## வைணவ வழிபாடு

பாலகுமாரன் எழுதிய உடையார் என்ற வரலாற்றுப் புதினத்தில் இராசேந்திரச் சோழரின் அத்தை குந்தவை தேவி கைதிகளுடன் உரையாடியபோது வைணவத்தின் மீதான அவரது எண்ணத்தைக் கூறியுள்ளார். "நான் சைவ சமயத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும் வைணவ சம்பிரதாயங்கள் மீது எனக்குக் காதல் உண்டு. கண்ணனின் கதைகள் மீது எனக்குப் பிடித்தம் உண்டு. ஆழ்வார்களின் சரிதங்களையும் சில பிரபந்தங்களையும் கேள்விப்பட்டிருக்கிறேன்." (Balakumaran, 2002) என்று குந்தவை கூறுவதில் இருந்து சோழ தேசத்தில் விண்ணகரம் என்று அழைக்கப்படும் வைணவ கோயில்களும் இருந்துள்ளன என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

## சமண வழிபாடு

சமணர் என்றால் துறவிகள் என்று பொருள். தமிழில் அமணர் என்றும் வழங்குவர். வடஇந்தியாவில் உடலை வருத்தித் தவம் செய்யும் பௌத்த சமண ஆசிகவத் துறவிகளைக் குறித்தாலும் தமிழ்நாட்டில் சமணரையே குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தினர் என ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகிறார். சமண சமயக் கடவுளுக்கு அருகன் என்ற பெயரும் உண்டு. அதன் காரணமாக அருகனை வணங்குவோர் ஆருகதர் என்றழைக்கப்பட்டு அந்த மதத்திற்கு ஆருகத மதம் என்ற பெயரும் ஏற்பட்டது. பற்றற்றவர் சமணக் கடவுள் என்பதால் நிர்க்கந்தர் அல்லது நிகண்டர் எனப்பட்டார். இதன் காரணமாகவே சமண சமயம் நிகண்ட மதம் என்று பெயர் பெற்றது. இதுவரையில் தோன்றியுள்ள 24 தீர்த்தங்கரர்களில் முதலில் வரும் 22 தீர்த்தங்கரர்களும் அதிக உயரமும் அதற்கேற்ற பருமனும் கொண்டிருந்ததாகக் கூறப்படுவது இயற்கைக்கு மாறுபாடானது என்பது ஒன்றாகும். சமணம் பிற்காலத்தில் சுவேதாம்பர சமணம், திகம்பர சமணம், ஸ்தானவாசி சமணம் எனும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டது. திகம்பர சமணர்கள் பண்டைக் காலத்தில் பெரும் தொகையினராக இருந்தனர். தற்காலத்தில் தமிழகத்தில் உள்ள சமணர்கள் திகம்பர சமணரே. வளம்பெற்ற நாடுகளுள் ஏரியூர் நாடு என்று அழைக்கப்பட்ட வெண்டையம்பட்டி, ஆவாரம் பட்டி போன்ற ஊர்களுக்குள் சுரக்குடிப்பட்டி என்ற ஊரும் உள்ளது. சோழ மன்னன் இராசராசனால் வளம் பெற்ற இந்த ஊரில் அவரது ஆதரவு பெற்ற சமண ஆலயமும் சிறப்பாக இருந்திருக்கும் என்று வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அங்குள்ள ஐயனார் கோவிலில் சமண தீர்த்தங்கரரின் சிற்பம் உள்ளதைக் கண்டுள்ளனர். இச்சிற்பம் பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பல்லவர் கால கல்வெட்டு ஒன்று இப்பகுதியில் சமணம் செழுமையுற்றுத் திகழ்ந்துள்ளதைக் காட்டுகின்றது.

இராசராசன் ஆட்சிகாலத்தில் வாழ்ந்த மக்கள் அவரவர் விரும்பிய சமயத்தைக் கொண்டுள்ளனர் என்பது இச்சமயவழிவழிபாடுகளால் நன்கு புலனாகிறது. "கி.பி.7ம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் கோயிற்கலை முறையாகவும் படிப்படியாகவும் வளர்ந்தது சோழர் காலத்தில் கோயிற்கட்டிடக்கலை மகோன்னதமாக ஒங்கியது வானளாவ எழுந்த கர்ப்பக கிருக விமானம் அதன்முன் அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், ஸ்தாபன மண்டபம், வாத்திய மண்டபம், வாகன மண்டபம் எனப் பலவகை அமைந்தன. பின்னர் நூற்றுக்கால் மண்டபம் ஆயிரக்கால் மண்டபம், திருக்குறள், நீராழி மண்டபம் எனப் பலப்பல அமைப்புக்களும் பெருகின." என்று திருக்கோயில் அமைப்பு என்ற தலைப்பில் இவர் பதிவுசெய்துள்ளார் (Chidambaranar et al., 2007)..

## பௌத்த வழிபாடு

சோழர் ஆட்சியில் நாகப்பட்டினத்தில் உள்ள புத்தவிகாரம் புகழ்பெற்று விளங்கியது. இலங்கையில் இருந்து புத்தபிட்சுகள் அதிகம் வந்து சென்ற இடம் நாகை விகாரம் இராசேந்திர சோழனின் தங்கை 'மாதேவி' என்ற பெண் புத்த மதத்தைத் தழுவியதாக உடையார் புதினத்தில்

ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவள் தலைமை புத்தபிட்சுவாக இருந்துள்ளாள். அவர்கள் தேவரடியார் பெண்களுக்குத் தற்காப்பு பயிற்சி அளித்துள்ளதாகவும் ஆசிரியர் நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சவன்மாதேவியும், தேவரடியாரான இராஜராஜியும் பேசிக் கொண்ட உரையாடலில் "அது அவ்வளவு எளிதல்ல தாயே. என்னை வெட்டுவதாக இருந்தால் எனக்கு ஒரு வாளைக் கொடுத்துவிட்டு வெட்டு என்று சொல்வேன்.

"போர் போர்ப்பயிற்சியும் உண்டா"

"தற்காப்புப் பயிற்சி உண்டு"

"எங்கு கற்றாய்"

"புத்த பிட்சுக்களிடம்"

"எப்போது"

"காஞ்சிபுரத்தில்"

"புத்தபிட்சுக்கள் போர்ப்பயிற்சி தருகிறார்களா"

"இல்லை தற்காப்பு பயிற்சி தருகிறார்கள். சாதுவான ஒரு புத்தபிட்சுவை எவரும் அடித்து வீழ்த்திடமுடியாது. அந்த அடியைத் தடுப்பது எப்படி என்றும் எப்படி அடித்தால் எதிரி சாய்வன் என்று தெரியும் (Balakumaran, 2004).

மணிமேகலை, குண்டலகேசி, வீரசோழியம், சிந்தாந்தத் தொகை போன்ற நூல்கள் பௌத்த மதத்தைத் தழுவியவர்களால் எழுதப்பெற்றது. இதில் மணிமேகலையே முதன்மையானது. சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் பெண் துறவு நிலை பெற்று ஞானம் என்ற உயர் நிலையை அடையச் செய்யும் நிலையில் படைக்கப்பெற்றுள்ளது. மணிமேகலையில் புத்தர் வரலாறு இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் பிற்காலச்சோழர் வழிபாடுகளில் பௌத்த வழிபாடும் இடம்பெற்றுள்ளது என்பது புலனாகிறது.

## முன்னோர் வழிபாடு

ஆதி மனிதன் முதல் தற்போது உள்ள மனிதன் வரை மாறாமல் பின்பற்றப்படும் வழிபாடுகளில் ஒன்று முன்னோர் வழிபாடு இறந்தபோன முன்னோர்களைச் சிலையாக வைத்துக் குலம் காக்கும் தெய்வமாகவே வழிபட்டனர். அந்த முறையை 'குலதெய்வக் வழிபாடு' என்றும் அழைப்பர். முன்னோர்களின் நினைவாக அவர்களது திருவுருவ படங்களுக்கு மாலைப் போட்டு தீபம் ஏற்றி அன்னதானம் வழங்கும் பழக்கம் தற்போது வரை நடந்து கொண்டு இருக்கிறது.

## நடுகல் வழிபாடு

போரில் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல்லை நடுகல் என்று அழைப்பர். அந்தக் கல்லிற்கு மஞ்சள், சந்தனம், குங்குமம் பொட்டு வைத்து ஏதாவது ஒரு மலர் சூடி வழிபாடு நடத்தினால் அதனை நடுகல் வழிபாடு என்று அழைப்பர் பண்டைய இலக்கியங்களில் இறந்த அரசர்களின் நினைவாகவும் இறந்த போர் வீரனின் நினைவாகவும் நடுகல் வழிபாடு தமிழ் மண்ணில் தொன்றுதொட்டு நடந்துள்ளது. இதனைப் புறநானூறு பாடலில் காணலாம்.

"நினையாக் கூற்றம் இன் உயிர் உய்த்தன்று

பைதல் ஒக்கல் தழீஇ அதனை

வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்

நனந்தலை உலகம் அரந்தை தூங்கக்

கெடுவில் நல்லிசை சூடி

நடுகல் ஆயினன் புரவலன்." (பாடல் 221)

இப்பாடலின் மூலம் அரசன் கோப்பெருஞ்சோழன் இறந்தபின்பு அவனுடைய நண்பரான பொத்தியார் அவனை நினைத்து வருந்திப் பாடுவதாக கூறப்படுகிறது. இதே போன்று உடையார் புதினம் மற்றும் கங்கை கொண்ட சோழன் என்ற இரு புதினங்களிலும் போர் வீரர்களுக்கான நடுகல் வழிபாடு பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## பள்ளிப்படை கோவில்

நடுகல்லை சுற்றிச் சுவர் எழுப்பி பாதுகாத்து வழிபட்டு வந்த முறையை பள்ளிப்படை என்று அழைத்தனர். பிற்காலச் சோழர் ஆட்சியில் இறந்த அரசர்களின் சாம்பலை வைத்து சிறிய அளவில் கோவில் கட்டி வழிபடுவர். "முதல் இராசராசன், இறந்த தன் முன்னோர்குப் பள்ளிப்படை (கோவில்) கட்டியதாகக் கல்வெட்டொன்று கூறுகிறது" என்று அவரது நூலில் கூறியுள்ளனார்." (Rasamanikanar, 2016).

இராசேந்திர சோழன் தனது சிற்றன்னையான பஞ்சவன்மாதேவி என்பவருக்குப் பள்ளிப்படை கட்டியதாக ஆசிரியர் பாலகுமாரன் எழுதிய ஆய்வு எல்லையில் சொல்லப்பட்ட இரு நூல்களிலும் பதிவு செய்துள்ளார். இராசராசரின் பள்ளிப்படை, அவரது பட்டமகிசியின் பள்ளிப்படை பஞ்சவன் மாதேவியின் பள்ளிப்படை, அவர்களுக்கு முன் இருந்த பராந்தகர் பள்ளிப்படை, சுந்தர சோழர் பள்ளிப்படை இப்படி உள்ள எல்லா பள்ளிப்படைக் கோயிலையும் பாசுபதத்தைச் சேர்ந்த லகுலீச பண்டிதர் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இராசேந்திரன் கூறியதாக ஆசிரியர் புதினத்தில் பதிவு செய்துள்ளார். "சோழ தேசத்தில் உள்ள அத்தனை பள்ளிப்படை கோவில் களையும் நீங்கள் நிர்வகிக்கும் படியாக ஒரு சாசனம் எழுதித் தருகிறேன். அதைக் கல்வெட்டாகவும் மாற்ற முயற்சிக்கிறேன். லகுலீச பண்டிதர். இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். இதற்கு உண்டான பொன் கழஞ்சுகள் ஐந்நூறு முன் பணமாக இப்போது தருகிறேன்". என்று இராசேந்திர சோழன் குறிப்பிட்டதாகப் புதினத்தில் இடம்பெற்றுள்ளது (Balakumaran, 2002).

## நீத்தார்கடன்

சங்க காலத்தில் இருந்து இன்று வரை கடைப்பிடிக்கும் பழக்கங்களில் ஒன்று நீத்தார் கடன் செலுத்துதல், இறந்தவர்களின் நினைவு நாளாள விண்மீன் நாளை, வீட்டில் உள்ள அனைவரும் நீர் உள்ள பகுதிகளுக்குச் சென்று வழிபடுவர். நாட்டில் உள்ள கடல். ஆறு, போன்ற நீர்நிலைகளில் முன்னோர்களுக்கான நீத்தார்கடன் செய்யப்படும் வழக்கம் தொன்று தொட்டே மரபு ரீதியாக கடைபிடிக்கப்படுகிறது. அதன் மூலம் இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக பழங்காலம் தொட்டு நம்பப்படுகிறது. இராசேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றிப்பெற்று திரும்பும் போது கங்கை நீரை திவளைகளில் கொண்டுவந்தான். ஜெயங்கொண்டத்தில் அவன் உருவாக்கியிருக்கும் நகரத்தில் பெரிய ஏரி ஒன்றை வெட்டியுள்ளான். அதில் கங்கை நீரை விட்டு சோழகங்கம் என்று அழைத்தான், அது தவிர முன்னோர்களுக்கு நீர் வார்த்தான். இந்நிகழ்வை பாலகுமாரன் அவர்கள் "நூறு நொடிக்கும் மேலாக ஒரு பெரிய தூண் நீர்தூண் அந்த ஏரியில் இருந்தது. அந்த கம்புகளுக்கு ஊடே நீர் நிரம்பியது தெரிந்தது. கை கூப்பியபடியே இராசேந்திரர் இருந்தார். "அப்பா, அப்ப, மாமன்னா, இராஜராஜா உனக்கு பார்க்க முடிகிறதா, உன்னால் உணர முடிகிறதா. உன்னால் இந்த நீர் தூணைக் காண முடிகிறதா, ஐயனே, என் அப்பனே, என் ராஜனே, இது உனக்காக நான் செய்தது. இது நான் செய்தது. இது நான் கையில் ஊற்றாது, ஒரு புனலில் ஊற்றி உனக்கு விட்ட தர்ப்பணம் இது திருப்தி யத திருப்தி யத திருப்தி யத. எத்தனை பேர் இறந்து போயிருக்கிறார்கள். எத்தனை களிறுகள், எருதுகள், குதிரைகள் மாண்டிருக்கின்றன. எல்லோருக்கும் இந்த நீரை என் கட்டை விரல் மறித்து ஊற்றும் நீராக அவர் மனத்தேக்கம் தீர்க்கும பொருட்டு வார்க்கிறேன். திருப்தியத திருப்தி யத திருப்தி யத, அவர் கதறினார். ஜனங்கள் விம்மி விம்மி அழுதார்கள். இந்த ஏரிக்குப் பெயர் சோழகங்கம் என்று சர்வசிவ பண்டிதர் உரக்க கத்தினார். அந்தப் பெயர் இராசேந்திரருக்கு பிடித்திருந்தது. ஆமாம் இது

சோழகங்கம் சோழர்கள் ஏற்படுத்திய கங்கை ஆறு கங்கை ஏரி என்று உரக்க சொல்ல எல்லோரும் அதைப் பரிமாறிக் கொண்டார்கள் (Balakumaran, 2014).

இதன் மூலம் முன்னோர்களுக்குச் செய்கின்ற நீத்தார் கடன் மரபு வழிபாடுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிய முடிகிறது. இன்றளவும் இப்பழக்கம் தமிழருடைய பழக்கங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

## நவகண்டம்

நாட்டை அதிகம் நேசிக்கும் ஒருவன் அரசர் போருக்குச் செல்லும் முன்போ அல்லது போரில் வெற்றி அடைந்து திரும்பிய பின்னரோ தன் தலையைத் தானே கொய்து கொள்வதை அக்காலத்தில் வழக்கமாக கொண்டனர். "சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீஇராசராசத் தேவர் மேலைச் சாளுக்கியத்திலிருந்து மறுபடியும் தஞ்சைககு வந்து பெருங்கோயில் கட்டி, பெரும் புகழோடு வாழ்வதற்காகவும், சோழ தேசத்தின் கீர்த்திக்காகவும் இந்தக் காரிப்பெருங்கணை நவகண்டம் கொடுக்கிறான் என்று உரக்கச் சொல்லி குனிந்த முகம் நீரில் படஇருக்க, அவன் வலக்கை சரக்கென்று வாளை எடுத்து வேகமாகச் சுழற்றி கழுத்தில் அடித்துக் கொண்டது. அந்த வெட்டு மிகச்சரியாக மிகப் பலமாக அவன் பின்னங்கழுத்தில் விழுந்தது கழுத்து துண்டாயிற்று. மூங்கில் பளிச்சென்று குடுமியோடு அவன் தலையைப் பற்றி இழுத்து நமிர்ந்து நாலாபுறமும் ஆடியது எல்லா பக்கங்களும் ரத்தம் தெறித்தது." அவர் இறந்த இடத்தில் அவர் நினைவாக விளக்கு ஏற்றப்படும். சில இடங்களில் நவகண்டம் கொடுத்த மனிதனின் இறப்பைப் போரில் இறந்த வீரனாக நினைத்து கல்நட்டு மஞ்சள், சந்தனம், பூசி விளக்கு வைத்து வழிபட்டார்கள். அவ்விளக்கை 'நந்தா விளக்கு' என்றும் அழைப்பர். விளக்குப் போடுவதற்கு உண்டான செலவை அரசே ஏற்கும் நிலை இருந்துள்ளது.

## சடங்குகள்

திருமண விழாவில் முதல் நாள் பெண் அழைத்தல், மஞ்சள் நீராட்டு விழா, பந்தல்கால் நடுதல், குழந்தைப் பிறப்பை விழாவாகக் கொண்டாடுதல், வளைபூட்டு நிகழ்ச்சி, குழந்தைக்குப் பெயர்வைத்தல் விழா, காதணி விழா, குழந்தை வளர்ந்த பிறகு கல்வி கற்க அனுப்புதல், எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் நல்ல நேரம் பார்த்தல், பல விதமான பூசைகள் செய்தல், விருந்தோம்பல் போன்ற பழக்க வழக்கங்கள் பிறப்பு முதல் இறப்பு வரை அக்காலத்தில் இருந்து தற்போது வரை தொடர்ந்துக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறன அவரவர் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்பஅவை மாறுபடும்.

## முடிவுரை

இராசராச சோழன் அவரது தாத்தாவிற்குப் பள்ளிப்படை அமைத்துள்ளார். இராசேந்திர சோழர் அவரது பாட்டி செம்பியன் மாதேவி படிமத்தைக் கோயிலில் வைத்துள்ளார். தவிர சிற்றன்னையான பஞ்சவன்மாதேவிக்குப் பள்ளிப்படை கோவில் அமைத்துள்ளார். இவர்களைப் போல குந்தவையும் தாய், தந்தையின் உலோகச் சிலை செய்து தஞ்சை பெரிய கோவிலில் வைத்துள்ளார். தந்தை பெயரால் ஆதுர சாலை கட்டியுள்ளார். இவர்களைப் பற்றிய இந்த வரலாற்று முறை ஆய்வில் ஒரு தந்தை மகனுக்குச் செய்யும் கடமை பற்றியும், பேரன், தாத்தா, பாட்டிக்கு செய்யும் கடமை பற்றியும் நன்கு அறியமுடிகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர்கள் பின்பற்றிய வழிபாட்டு முறைகளைத் தற்பொழுதும் சிலர் கடைபிடித்து வருகின்றனர். இறந்த போன தாய், தந்தை, தாத்தா, பாட்டி போன்றவர்களுக்கு, அவர்களது நினைவாக வயல்களின் நடுவே நினைவிடம் அமைப்பதும், பொருளாதாரத்தில் முன்னேறியவர்களாக இருந்தால் தாய் பெயரில் மருத்துவமனைகள், தந்தை பெயரில் கல்விக் கூடங்கள் என்று அமைப்பதும் நிலவிவருகின்றன. இறப்பு நிகழ்வுகள், குழந்தைப் பிறப்பு போன்ற பழக்க வழக்கங்கள் சமயத்திற்கு ஏற்றவாறு மாறுபடுகிறதே தவிர தற்போது வரை அனைவராலும் பின்பற்றப்படுகின்றன. கிராமங்களில் அதிக அளவு வழிபாட்டு முறைகள்

பின்பற்றப்படுகின்றன. நகரங்களில் சில இடங்களில் கடைபிடிக்கப்படுகின்றன. 'வழிபாட்டின்' அவசியம் உணர்ந்து அவற்றை அறிவியல் ரீதியாகவே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். "நம்பிக்கைகள் வலுப்பெறும் போது வழிபாடு அவசியமாகிறது" என்ற உண்மையைக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அதன் மூலமே பண்பிலும், பழக்கத்திலும் சிறந்ததொரு சமூகத்தை உருவாக்க முடியும். இவ்வாறாகத் தமிழ்ச் சமூகத்தில் உள்ள வழிபாட்டு மரபுகள் காலத்திற்கு ஏற்றவாறு மாறுபட்டுள்ளன, தவிர காலம் காலமாக பின்பற்றப்பட்டும் வருகின்றன. என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

## References


Balakumaran, (2002) Udayar Bagam 1, Visa Publication, Chennai, India

Balakumaran, (2004) Udayar Bagam 3, Visa Publication, Chennai, India

Balakumaran, (2014) Gangai Konda SolanBagam 3, Visa Publication, Chennai, India

Chidambaranar, S., Sundaresan, P., Somasundarampillai, J.M., Muthaiyan, D., Visvanathan, K.A.P. (2007) Tamilar Kalai Veeram matrum Nagarigam, Thayal Veliyedu, Chennai, India

Ramanadhan, P. (2008) Tamilar Varalaru, Tamil Man Pathippagam, Chennai, India

Rasamanikanar, (2016) Solar Varalaru, Maruthamail Pathoppagam, Coimbatore, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License